தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

சித்திரை 28, பிரமோதூத —திருவள்ளுவராண்டு – 2021
1990 மே 11, வெள்ளிக்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் முனைவர் மு. தமிழ்க் குடிமகன் அவர்கள் தலைமையில் காலை 9–00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

'' கேட்டினும் உண்டோர் உறுதி கிளைஞரை
நீட்டி அளப்பதோர் கோல் ''.

ஒருவர்க்கு ஏதாவது ஒரு கேடு வருமானால், அதிலும் ஒரு வகை நன்மை உண்டு. அந்தக் கேடுதான், அதுவரை பழகி வந்த நண்பரின் இயல்புகளை நீட்டி அளந்து பார்ப்பதற்குரிய அளவு கோலாகும்.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

பொதுமக்கள் குறைதீர்க்கும் துறை.

* *1780*—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பொதுமக்களின் குறைகளைக் கேட்டு அவற்றைத் தீர்த்து வைக்கும் சிறப்பு அதிகாரங்கள் கொண்ட 'பொதுமக்கள் குறை தீர்க்கும் துறை' (Department of Public Grievances) ஒன்றைப் புதிதாக உருவாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு திங்கட்கிழமையும் கலெக்டர் ஆபிசிலே கலெக்டர்கள், 'கிரீவன்ஸ் டே' என்று வைத்து மனுக்களை வாங்குகிறார்கள். நாங்களும் அந்த மனுக்களைக்

கொண்டு வந்து, மாண்புமிகு அமைச்சர்கள் கருணையோடு அவைகளையெல்லாம் செய்து கொடுப்பார்கள் என்று நினைத்து மனுக்களைக் கொடுக்கின்றோம். இதற்கு ஒரு காலமாவது நிர்ணயம் செய்து, ஒரு மூன்று மாதத்திற்குள்ளாக இவற்றையெல்லாம் டிஸ்போஸ் செய்யவேண்டுமென்ற நிலைமைகளையாவது அமைச்சர் அவர்கள் உருவாக்கிக் கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, தலைமைச் செயலகத்தில் ஒவ்வொரு துறையிலும் புகார்ப் பிரிவு என்ற ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பிரிவிற்கு வரும் புகார்கள், அவற்றைத் தீர்ப்பதற்கு வரையறுக்கப்பட்ட கால அளவோடு புகார்களைப் பரிசீலனை செய்து, அவற்றைத் தீர்ப்பதற்கு எடுத்துள்ள நடவடிக்கைப் பணிகளுக்கான முன்னேற்றத்தைக் கண்காணிப்பதற்கு அலுவலக நிர்வாகத்திற்கு பொறுப்புள்ள அரசுத் துணைச் செயலாளர், புகார்ப் பிரிவு அதிகாரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். ஆகவே, அவர் இவற்றையெல்லாம் கவனித்து வருகிறார். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய அந்தக் கோரிக்கைக் கேற்ப, மேலும் அதை விரைவுபடுத்தவும், தீவிரப்படுத்தவும் அரசு நடவடிக்கை எடுக்கத் தயங்காது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல்வர் அவர்கள் சிறப்பான முறையிலே பதில் அளித்தாலும்கூட, சில சமயங்களில் அசெம்பிளியில் மினிஸ்டர்களால் தரப்பட்ட அஷ்யூரன்ஸ்கள்—முதல்வர் அவர்களாலேயே கொடுக்கப்பட்ட சில அஷ்யூரன்ஸ்கள், சில உறுதிமொழிகள், அவை கூட ஆறு மாதம், ஓராண்டு, என்று இப்படி காலம் நீட்டிக் கொண்டு போகிறதே, பாவம், மக்கள் ரொம்ப ஆசையோடு எதிர்பார்க்கிறார்கள். இவற்றைச் செய்து கொடுப்பீர்கள் நீங்கள், உங்களால் முடியும் என்று நம்புகின்றார்கள். ஆகவே, இந்த மாதிரி சட்டமன்றத்தில்—எக்சாம்பிளுக்காக—நான் எல். எம். பேங்க் இல்லை என்று சொன்னேன். உடனே 'கொடுக்கலாம்' என்று சொல்லி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிலே கையெழுத்துப் போட்டுக் கொடுத்தார்கள். (குறுக்கீடு) எல்.எம். பேங்க் கொடைக்கானல் போகமுடியவில்லை. நிலக்கோட்டைக்கு என்று சொல்லி, அரசு அங்கேயே செய்து கொடுக்க வேண்டும் என்று சொன்னவுடனேயே, படித்துப் பார்த்து விட்டு, அங்கேயே கொடுத்து விடலாம் என்று ஒரு உறுதிமொழி என்னிடத்திலே சொல்லியிருந்தார்கள். அதெல்லாம் இன்று வரை கூட நடைபெறவில்லை. இப்பேர்ப்பட்ட உறுதிமொழிகளையாவது, மக்களுக்கு அத்தியாவசியமான தேவைகள் இருக்கக்கூடிய உறுதிமொழிகளையாவது உடனடியாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

1990 மே 11]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : எந்தெந்த உறுதி மொழிகளுக்குப் பின்னாலும், அவை உத்தரவாக வருவதற்கு முன்னாலும், எத்தனையோ சாங்கியங்கள், சம்பிரதாயங்கள் இருக்கின்றன. இது கடந்த காலத்திலிருந்து எல்லா அரசு களிலும், அதிகாரிகளால் கடைபிடிக்கப்பட்டு வருகின்ற முறை யாகும். அந்த முறைகள் பின்பற்றப்படாவிட்டால், ஏதோ அதிகாரிகளுடைய அதிகாரங்கள் குறைக்கப்பட்டதாகக் கூட அவர்கள் கருதுகிறார்கள். இருந்தாலும் கூட, இதுபோன்ற கேள்விகள், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலமாக வருவதை அவர்களும் எண்ணிப் பார்த்து, உடனடியாக இதற்குத் தீர்வு காண இந்த வினா பயன்படும் என்று நானும் அவர்களோடு சேர்ந்து கூறிக் கொள்ள விரும்பு கிறேன்.

திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் நேரடியாகத் தரப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை எவ்வளவு ? எவ் வகையான கோரிக்கைகள் வந்துள்ளன என்பதை அறிவிக்க முடியுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நான் மீண்டும் 1989-ஆம் ஆண்டு பொறுப்பிற்கு வந்த பிறகு தரப்பட்ட விண்ணப்பங்களின் மொத்த எண்ணிக்கை 6,80,000-க்கு மேற்பட்டது. அதில் நேரில் என்னிடமே கொடுத்தது, 2,47,000-க்கு மேற்பட்டது. முதலமைச்சர் அலுவலகத்திலே கொடுத்தது ஏறத்தாழ 3,50,000. தபால் மூலம் வந்தவை 84,000 மனுக்கள்.

9-05 மணி

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுமக்களின் குறை குறித்து நமது முதலமைச்சர் அலுவலகத்திற்குக் கடிதம் எழுதினால் மட்டும் பதில் வருகிறது. மற்ற அமைச்சர்களிடமிருந்து எங்களுக்குப் பதில் வருவதில்லை. பாராளுமன்றத்தில் இருப்பதுபோல, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏதாவது கோரிக்கைகளைச் சொல்லி, மனுக்களை எழுதினால் சம்பந்தப்பட்ட அமைச்சர் களே கையெழுத்துப் போட்டு, பதில் எழுதுகின்ற வழக்கத்தை அங்கெல்லாம் நடைமுறையாகக் கொண்டிருக்கிறார்கள். அதே போல ஒரு நடைமுறையைக் கொண்டு வருவதற்கு, நமது அரசு யோசிக்குமா என்றும், இன்னும் இதுபோல நமது அமைச்சர் பெருமக்கள் ஒவ்வொருவரையும் ஒவ்வொரு மாவட் டத்திற்கு நியமித்து, இரண்டு மாதத்திற்கு ஒருமுறை ஒரு திங்கட்கிழமை அங்கே வருகைதந்து, பொது மக்களையும் அதிகாரிகளையும், சட்டமன்ற உறுப்பினர்களையும் கூட்டி உட்கார வைத்து, பேசி முடித்து, குறைகளைத் தீர்க்க முடியுமா என்றும் நமது முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

[1990 மே 11

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எழுதுகின்ற கடிதங்களைப் பொறுத்து, அமைச்சர்களிடமிருந்து நிச்சயமாகப் பதில் வரும். வர வேண்டும். அதை அமைச்சர்களும் கவனிப்பார்களாக. மற்றொன்று, மாவட்டந்தோறும் அமைச்சர்கள் சென்று, குறைகளைக் கேட்க வேண்டுமென்ற கருத்தை திரு. பீட்டர் ஆல்போன்ஸ் இங்கே தெரிவித்தார்கள். அதோடு மட்டுமல்ல. ஆங்காங்கே நடைபெறுகின்ற ''டிஸ்ட்ரிக்ட் டெவலப்மென்ட் கவுன்சில்'' கூட்டங்களில் கூட, குறிப்பிட்ட சில அமைச்சர்கள் சென்று, அவற்றை நடத்தி வைக்க வேண்டுமென்ற கருத்தும் இருக்கிறது. சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிவுற்ற பிறகு, அதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.

திரு. கா. அண்ணாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது ஒவ்வொரு திங்கட் கிழமையும் மாவட்டத் தலைநகரில், பொதுமக்கள் குறை தீர்க்கும் நாள் நடைபெற்று வருகிறது. அதுபோல, மாவட்டத்தினுடைய பல பகுதிகளிலிருந்து மாவட்டத் தலைநகருக்கு வருகிற வாய்ப்பு இல்லாத பொதுமக்கள் இருக்கிற காரணத்தால், மாதத்திற்கு ஒரு முறையாவது வட்டத் தலைநகரிலேயே, மாவட்ட ஆட்சித் தலைவர் கலந்து கொள்கிற ஒரு குறை தீர்க்கும் நாளை நடத்த அரசு முன் வருமா என்பதை தங்கள் மூலம் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே 1969 ஆம் ஆண்டிலே, இதே ஆட்சி நடைபெற்றபோது, 15—9—1969இல் இந்தத் திட்டம் தொடங்கப் பெற்றது. அதற்கு, அப்போது 'மனுநீதித் திட்டம்' என்று பெயர் சூட்டப்பட்டது, மனுக்களைப் பெற்று, அதற்கு நீதி வழங்கவேண்டும் என்பதற்காக. அப்போது, அதிகாரிகள் அந்தந்த இடங்களுக்குச் சென்று, வட்டம், வட்டத்தை விட சிறிய பகுதி, இங்கெல்லாம் சென்று, அங்குள்ள மக்களின் குறைகளை நேரிலே கேட்டு அறிந்து, அவைகளை உடனடியாகத் தீர்ப்பதாயின் அங்கேயே தீர்த்து வைத்தும், பிறகு, ஒரு வாரம், ஒரு மாதத்திலே தீர்க்கக்கூடிய குறைகளைக் குறித்து நடவடிக்கைகள் எடுத்தும், அந்தத் திட்டத்தை அன்றைக்கு நிறைவேற்றி வந்தோம். அதிலே, இடையிலே தொய்வு ஏற்பட்டிருக்கக் கூடும். இருந்தாலும், இந்த அரசு அவற்றையெல்லாம் கவனித்து, எல்லா மக்களுடைய குறைகளையும் கேட்கின்ற முறைகளை மேற்கொள்ளும்.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அவர்களுடைய அலுவலகத்திற்கும், நேரிலேயும் வந்த ஏறத்தாழ ஆறு லட்சத்திற்கும் மேற்பட்ட மனுக்கள், இந்த ஓராண்டுகாலமாக வந்த

1990 மே 11]

தாகச் சொன்னார்கள். அப்படி எல்லாத் துறைகளைச் சார்ந்த அமைச்சர்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமும் வாரா வாரம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். உரிய முறையிலே உடனடியாக தீர்க்கக் கூடிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும், அப்படித் தீர்க்க முடியாத பிரச்சினைகளை மனுதாரர்களை நேரில் அழைத்து, அதைத்தீர்க்க முடியாத காரணங்களை அவர்களுக்குப் புரிய வைத்து, அவர்கள் தொடர்ந்து மனுக்களைக் கொண்டு வந்து தரக்கூடிய நிலைமை இல்லாமல், அவர்களுடைய மனுக்கள் மீது ஒரு முடிவுக்குக் கொண்டுவருவதற்குமான முயற்சிகளை அரசு எடுக்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

9-10 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனை பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தாலும், பிரச்சினைகள் நம்முடைய சமுதாயத்திலே ஏற்பட்டுள்ள ஏற்றத் தாழ்வுகளுக்கிடையே வளர்ந்துகொண்டே தான் போகின்றன. குறிப்பாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீரையன் அவர்களுடைய கேள்வியின் அடிப்படையிலே, இன்னொரு விவரத்தையும் சொல்ல வேண்டுமேயானால், என்னிடத்திலே தரப்பட்ட 6,83,264 மனுக்களில், வீட்டு வசதிக் கோரிக் கொடுக்கப்பட்ட மனுக்கள், 2,17,916; வேலைவாய்ப்புக் கோரிக் கொடுக்கப்பட்ட மனுக்கள், 84,134; கடன் உதவி கேட்டுக் கொடுக்கப்பட்ட மனுக்கள், 35,847; ஒய்வு ஊதியம், உடல் ஊனமுற்றோர், விதவைகள் மற்றும் முதியோருக்கான ஒய்வு ஊதியத்திற்குத் தரப்பட்ட மனுக்கள், 32,653. காவல்துறை நடவடிக்கை வேண்டி, கொடுக்கப்பட்ட மனுக்கள், 46,109. உணவு அட்டை சம்பந்தமான பிரச்சினை குறித்துக் கொடுக்கப்பட்ட மனுக்கள், 23,306. குடிநீர், மருத்துவ நிதி உதவி, கருணை அடிப்படையில் வேலை வாய்ப்பு, சாலை வசதி இதற்குப் பிறகுதான் பொதுப் பிரச்சினைகளே வருகிறது. பேருந்து வசதி, கல்வி வசதி, மின் இணைப்பு, பொதுப்பணி, அரசியல் மற்றும் மொழிப் போர் உதவித்தொகை இவை போன்ற ஏனைய பிற கோரிக்கைக்கான மனுக்கள் 2,43,301. எனவே, இவ்வளவு பிரச்சினைகளையும் நாம் தீர்ப்பது என்பது—உடனடியாகத் தீர்ப்பது என்பது—முடியாத காரியம். இதிலே நான் குறிப்பிட்ட இந்த 6,83,264 மனுக்களில் நடவடிக்கை எடுக்கப்பட்டது 6,63,027. எந்த நடவடிக்கையும் எடுக்காதது 20,237 மனுக்கள் மீதுதான் நடவடிக்கை எடுத்தோம் என்றால், எல்லாப் பிரச்சினைகளையும் தீர்த்துவிட்டோம் என்றல்ல. 'முடியும்', 'முடியாது' என்று பதில் எழுதப்பட்டு, முடிந்ததைச் செய்து கொடுத்தவைகள் எல்லாம் இதற்குள்ளே அடங்கும். எனவே, பிரச்சினைகள் வளர்ந்து கொண்டே போகின்ற ஒரு நாட்டினுடைய சமுதாய அமைப்பில் இவைகள் தவிர்க்க முடியாதவை.

[1990 மே 11

திரு. கே. பிச்சாண்டி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களிடம் கொடுக்கப்படுகின்ற பல்வேறு மனுக்கள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் உள்ள துறைகளுக்குக் கொடுக்கப்படுகின்றன. அங்கிருந்து சம்பந்தப் பட்டவர்களுக்குப் பதிலோ அல்லது சட்டமன்ற உறுப்பினருக்கு அதன்மேல் எடுக்கப்படும் நடவடிக்கை பற்றியோ தெரியப் படுத்துவது இல்லை. எடுக்கப்படும் நடவடிக்கையைத் தெரியப் படுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இதுபோன்ற கேள்விகளின் உட்பொருள் ஆங்காங்குள்ள அதிகாரிகளுக்கு விளங்கும் என்று நான் நம்புகிறேன்.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திற்கு சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஒன்றியப் பெருந்தலைவர்கள் எல்லாம் பொருள் கேட்டு அனுப்பி வைக் கின்றோம். ஆனால் அந்தக் கூட்டம் நடைபெறுகின்ற நேரத் தில், குறிப்பிட்ட கேள்விகளை மட்டும் எடுத்துக் கொள்கிறார் கள். மீதிக்குண்டான பதிலைக் கூட அந்தக் கூட்டம் நடை பெறுகின்ற நேரத்தில் கொடுப்பதில்லை. ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், அந்தக் கூட்டம் நடைபெறுகின்ற நேரத்தில் அனைத்துக் கேள்விகளுக்கும் உண்டான பதிலை அங்கே அச்சிட் டுக் கொடுக்கின்ற நிலைமையை உருவாக்கித்தர முன் வருவாரா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, விவாதிப்பதற்கு ஏற்ற பொருட்கள் பட்டியலிலே இடம் பெறும். அவை அஜெண்டாவிலே இடம் பெறவும், விவாதத்திற்கு ஏற் புடையவை அல்ல என்பதற்கான பதில் விளக்கங்களை அந்தக் கூட்டத்திலேயே வைப்பதற்கான ஏற்பாடுகளும், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அறிவிக்கப்பட்டு, செய்யப்படும்.

ஊட்டி போட்டோ பிலிம் தொழிற்சாலை.

*1944—திரு. எஸ். டி. உகம்சந்த் :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஊட்டியில் உள்ள போட்டோ பிலிம் தொழிற்சாலையில் கலர் பிலிம் தயாரிக்க மத்திய அரசை, தமிழக அரசு வற்புறுத்துமா ?